# மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், ஊத்துக்குளி

**முன்னிலை: திரு.த.திருநாவுக்கரசு, எம்.பி.ஏ., பி.எல்.,**

**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,ஊத்துக்குளி**

**2022–ஆம் ஆண்டு, ஜனவரி மாதம், 21–ஆம் நாள், வெள்ளிக்கிழமை**

**திருவள்ளுவராண்டு 2052, ஸ்ரீபிலவ வருடம், தை திங்கள், 08 ஆம் நாள்.**

**இடை மனு எண். 262/2021**

**அசல் வழக்கு எண். 09/2020**

**(மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அவினாசி, அசல் வழக்கு எண். 204 /2013 )**

விக்னேஷ் ... மனுதாரர்/ 1ம் பிரதிவாதி

/எதிர்/

1. மாரியம்மாள்,
அவருக்காக அவரது அதிகாரம் பெற்ற
முகவர் முருகேசன்.
2. அருண்குமார் .....எதிர்மனுதாரர்கள்/வாதி மற்றும் 2ம் பிரதிவாதி

இந்த மனுவானது இந்நீதிமன்றத்தில் கோப்பிற்கு எடுக்கப்பட்டு முழு விசாரணைக்குப் பின்னிட்டு இறுதியாக 12.01.2022 அன்று இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. கற்றறிந்த வழக்கறிஞர் மனுதாரர் தரப்பில் திரு.A.P.C. கிருஷ்ணமூர்த்தி, B.Com., B.L., ஆஜராகியும், 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் திரு. A.சின்னசாமி, B.A., B.L., ஆஜராகியும், 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் திரு.J.சரவணன், M.A., B.L., ஆஜராகியும் இவ்வழக்கில் விசாரிக்கப்பட்ட சாட்சியங்கள் மற்றும் ஆவணங்களை பரிசிலனை செய்து இருதரப்பு வாதங்களையும் கேட்டு இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்.

**உத்தரவு**

**1. மனுவின் நோக்கம்:–**

தாவா சொத்து மற்றும் அதைச் சுற்றியுள்ள இயற்பியல் அமைப்புகளை பார்வையிட்டு அதனை புகைப்படம் எடுத்து அத்துடன் அறிக்கை சமர்பிக்க நீதிமன்ற ஆணையரை நியமிக்க கோரி இந்த மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது.

D THIRUNAVUKKARASU

Digitally signed by D THIRUNAVUKKARASU
Date: 2022.01.21 16:27:51 +0530

**<u>2. மனுதாரர்/1ம் பிரதிவாதி தரப்பு மனுவின் விவரச்சுருக்கம்:-</u>**

தாவா சொத்தில் 1வது எதிர்மனுதாரருக்கு எவ்வித உரிமையும் பங்கும் இல்லை. வாதி/1வது எதிர்மனுதாரர் பெயரிலான கடந்த 25.08.1994 தேதிய கிரய பத்திரம் நடைமுறைபடுத்தப்படவில்லை அதன் அடிப்படையில் அவருக்கு சுவாதீணம் கொடுக்கப்படவில்லை. மனுதாரரும் மற்றும் 2 எதிர்மனுதாரரும் தான் தாவா சொத்தின் சுவாதீண அனுபவத்தில் இருந்து வருகிறார்கள் மேலும் தாவா சொத்தில் சுற்றுச்சுவர் கட்டி, வெளிபுற கதவமைத்து மற்றும் RCC கட்டிடம் கட்டியும் இன்னும் பல மேம்பாடுகள் செய்தும் தாவா சொத்தின் சுவாதீண அனுபவத்தில் சட்டத்தால் வரையரை செய்யப்பட்டுள்ள காலத்திற்கும் மேல் இருந்துவருகிறார்கள். தற்போது தாவாசொத்தின் இயற்கை கூறுகளை அழித்து மனுதாரர்களுக்கு இடையூறு கொடுக்கவேண்டும் என்ற நோக்கத்துடன் 1வது எதிர்மனுதாரர் தாவா சொத்தில் அத்துமீறி நுழைய முயற்ச்சித்துவருகிறார். மனுதாரரின் வழக்கிற்கு ஆதரவாக மனுதாரர் முன்வைக்க உத்தேசித்துள்ள ஆதாரங்களை அழிக்க எதிர்மனுதாரர் முயற்சித்து வருகிறார். 1வது எதிர்மனுதாரர் ஆள்பலம் மற்றும் செல்வாக்கு மிக்கவர் வழக்கு சொத்தில் உள்ள இயற்கை அமைப்பு மற்றும் ஆதாரம் அழிக்கப்பட்டுவிட்டால் அது மனுதாரரின் வழக்கிற்கு மிகவும் பாதகமாக இருக்கும். எனவே, தாவா சொத்து மற்றும் அதைச் சுற்றியுள்ள இயற்கை அமைப்புகள் வழக்கைத் தீர்ப்பதற்கு மிகவும் முக்கியமானவையாகும். எனவே தாவா சொத்தைப் பார்வையிட்டு தாவா சொத்து மற்றும் அதைச் சுற்றியுள்ள இயற்கை அமைப்புகளை புகைப்படம் எடுத்து அதனை குறிப்பிட்டு அறிக்கை சமர்பிக்க ஆனையர் நியமிக்கவேண்டியது அவசியமாகிறது என்று இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>3. 1ம் எதிர்மனுதாரர்/வாதி தரப்பு எதிருரையின் விவரச்சுருக்கம்:-</u>**

இந்த வழக்கே விளம்புகை பரிகாரம் மற்றும் சொத்தின் சுவாதீணம் கோரியும், தாவா சொத்தினை நலந்திகடு கண்டு நான்கு சமபாகங்களாக பிரித்து அதில் மூன்று சம பங்கினை வாதிக்கு ஒதுக்கிதரக்கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த மனுதாரர் தாவா சொத்தில் அத்துமீறி நுழைந்து சுவாதீணத்தில் இருந்து வருகிறார் என்பதனை இந்த எதிர்மனுதாரர் ஒப்புகொண்டுள்ளார் எனவே இந்த தருணத்தில் தாவாசொத்து மற்றும் அதனை சுற்றியுள்ள இயற்கை கூறுகளை பார்வையிட்டு ஆதரங்களை திரட்ட

D THIRUNAVUKKARASU

Digitally signed by D THIRUNAVUKKARASU
Date: 2022.01.21 16:28:04 +0530

நீதிமன்ற ஆனையரை நியமிக்க வேண்டிய அவசியமில்லை, வழக்கு தாக்கல் செய்த சமயத்தில் மனுதாரர் வசம் தாவா சொத்தின் சுவாதீண அனுபவம் இருந்தது என்பதனை நிரூபிக்க வேண்டிய கடமை மனுதாரருக்கு உள்ளது ஆனால் இவ்வளவு காலம் கடந்து இந்த மனு தாக்கல் செய்துள்ளது ஏற்புடையதாக இல்லை. இந்த மனுவே எப்படியாவது வழக்கினை காலம் கடத்திவிடவேண்டும் என்பதற்காகவே தாக்கல் செய்யப்பட்டுள்ளது எனவே இந்த மனு தள்ளுபடி செய்யவேண்டும் என்று எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**4.** இரண்டாம் எதிர்மனுதாரர் /2ம் பிரதிவாதிகள் தரப்பில் எதிருரை இல்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

**5. இந்த மனுவில் இருதரப்பிலும் விசாரிக்கப்பட்ட சாட்சியங்களும், குறியீடுசெய்யப்பட்ட ஆவணங்களின் விவரங்கள்:-**

இந்த மனுவில் இரு தரப்பிலும் எந்த சாட்சியங்களும் விசாரிக்கப்படவில்லை அதேபோல் எந்த ஆவணங்களும் குறியீடுசெய்யப்படவில்லை.

**6. மனுதாரர்/1ம் பிரதிவாதி தரப்பின் வாதத்தின் விவரச்சுருக்கம்:-**

தாவா சொத்தில் 1வது எதிர்மனுதாரருக்கு எவ்வித உரிமையும் பங்கும் இல்லை என்றும், கடந்த 25.08.1994 தேதிய கிரய பத்திரம் நடைமுறைபடுத்தப்படவில்லை என்றும் அதன் அடிப்படையில் 1வது எதிர்மனுதாரருக்கு சுவாதீணம் கொடுக்கப்படவில்லை என்றும், மனுதாரரும் மற்றும் 2 எதிர்மனுதாரரும் தான் தாவா சொத்தின் சுவாதீண அனுபவத்தில் இருந்து வருகிறார்கள் என்றும், தாவா சொத்தில் சுற்றுச்சுவர் கட்டி, வெளிபுற கதவமைத்து மற்றும் RCC கட்டிடம் கட்டியும் இன்னும் பல மேம்பாடுகள் செய்தும் தாவா சொத்தின் சுவாதீண ஆனுபவத்தில் இருந்து வருகிறார்கள் என்றும், தற்போது தாவாசொத்தின் இயற்கை கூறுகளை அழித்து மனுதாரர்களுக்கு இடையூறு கொடுக்கவேண்டும் என்ற நோக்கத்துடன் 1வது எதிர்மனுதாரர் தாவா சொத்தில் அத்துமீறி நுழைய முயற்ச்சித்து வருகிறார் என்றும், மனுதாரரின் வழக்கிற்கு ஆதரவாக மனுதாரர் முன்வைக்க இருக்கின்ற ஆதாரங்களை அழிக்க 1ம் எதிர்மனுதாரர் முயற்சித்து வருகிறார் என்றும், தாவா சொத்தில் உள்ள இயற்கை அமைப்பு மற்றும் ஆதாரம் அழிக்கப்பட்டுவிட்டால் அது மனுதாரரின் வழக்கிற்கு மிகவும் பாதகமாகவிடும் என்றும், தாவா சொத்திலுள்ள சுற்றுச்சுவர், அதில் உள்ள

D THIRUNAVUKKARASU

Digitally signed by D THIRUNAVUKKARASU
Date: 2022.01.21 16:28:21 +0530

கட்டுமானங்கள் மற்றும் மனுதாரர்கள் செய்துள்ள இதர மேம்பாடுகள் ஆகியவற்றை காண்பிக்க வேண்டியுள்ளது என்றும், எனவே, தாவா சொத்தைப் பார்வையிட்டு தாவா சொத்து மற்றும் அதைச் சுற்றியுள்ள இயற்கை அமைப்புகளை புகைபடம் எடுத்து அறிக்கை சமர்பிக்க ஆனையர் நியமிக்கவேண்டியது அவசியமாகிறது என்றும்,இந்த மனுதாரர் தரப்பில் வாதிடப்பட்டது.

**7. 1ம் எதிர்மனுதாரர்/வாதி தரப்பின் வாதத்தின் விவரச்சுருக்கம்:-**

இந்த வழக்கே விளம்புகை பரிகாரம் மற்றும் சொத்தின் சுவாதீனம் கோரியும், தாவா சொத்தினை நலந்திகடு கண்டு நான்கு சமபாகங்களாக பிரித்து அதில் மூன்று சம பங்கினை வாதிக்கு ஒதுக்கிதரக்கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், இந்த மனுதாரர் தான் தாவா சொத்தில் அத்துமீறி நுழைந்து சுவாதீனத்தில் இருந்து வருகிறார் என்பதனை இந்த எதிர்மனுதாரரே ஒப்புகொண்டுள்ளார் எனவே தாவாசொத்து மற்றும் அதனை சுற்றியுள்ள இயற்கை கூறுகளை பார்வையிட்டு ஆதரங்களை திரட்ட நீதிமன்ற ஆனையரை நியமிக்க வேண்டிய அவசியமில்லை என்றும், வழக்கு சாட்சிய விசாரனை துவங்கி நிலுவையிலிருந்து வரும் இந்நிலையில் இவ்வளவு காலம் கடந்து இந்த மனு தாக்கல் செய்துள்ளது ஏற்புடையதாக இல்லை என்றும், இந்த மனுவே எப்படியாவது வழக்கினை நடத்தாமல் காலம் தாழ்த்தவேண்டும் என்பதற்காகவே தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் வாதிடப்பட்டுள்ளது. மேலும், எதிர்மனுதாரர் தரப்புக்கு ஆதரவாக இருப்பதாக சொல்லி Chinnathambi & Others Versus Anjalai reported in 2006 (5) CTC 494,and A. Meganathan Versus S. Ramalingam reported in 2017 (3) MWN (Civil) 627 and S. Anand & Others Versus A. Jeyabalan & Others reported in 2020 (1) CTC 182 and Gajendran -Vs-1.Kuppu 2.Muthu 3.Mala reported in 2017 (3) TLNJ 238 (Civil) and Dhanalakshmi - Vs- 1. Kumaresan 2. Nasathram 3. Dhanalakshmi 4. Rani 5. Lakshmi reported in 2021 (3) TLNJ 40 (Civil) ஆகிய முன்தீர்ப்புகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**8. இந்த மனுவில் தீர்மானிக்கபட வேண்டிய விடயம்:-**

இந்த மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய விடயம் யாதெனில் இந்த மனு அனுமதிக்க வேண்டியதா இல்லையா என்பதே ஆகும்.

**9. தீர்விற்கான காரணிகள்:-**

9.1. இருதரப்பு வாதங்களும், மனுவும், எதிருரையும், பரிசீலிக்கப்பட்டது. இந்த மனுவினை பரிசீலனை செய்ததில் தாவா சொத்து மற்றும் அதைச் சுற்றியுள்ள

D THIRUNAVUKKARASU Digitally signed by D THIRUNAVUKKARASU Date: 2022.01.21 16:28:33 +0530

இயற்பியல் அமைப்புகளை பார்வையிட்டு புகைபடம் எடுத்து அத்துடன் அறிக்கை சமர்பிக்க நீதிமன்ற ஆனையரை நியமிக்க கோரி இந்த மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது தெரிகிறது.

9.2. மனுதாரர் தரப்பில் தாவா சொத்தில் 1வது எதிர்மனுதாரருக்கு எவ்வித உரிமையும் பங்கும் இல்லை என்றும், கடந்த 25.08.1994 தேதிய கிரய பத்திரம் நடைமுறைபடுத்தப்படவில்லை என்றும் அதனடிப்படையில் 1வது எதிர்மனுதாரருக்கு சுவாதீணம் கொடுக்கப்படவில்லை என்றும், தாவா சொத்தில் சுற்றுச்சுவர் கட்டி, வெளிபுற கதவமைத்து மற்றும் RCC கட்டிடம் கட்டியும் இன்னும் பல மேம்பாடுகள் செய்தும் தாவா சொத்தின் சுவாதீண ஆனுபவத்தில் மனுதாரர் தான் இருந்துவருகிறார்கள் என்றும், தற்போது தாவாசொத்தின் இயற்கை கூறுகளை அழித்து மனுதாரர்களுக்கு இடையூறு கொடுக்கவேண்டும் என்ற நோக்கத்துடன் 1வது எதிர்மனுதாரர் தாவா சொத்தில் அத்துமீறி நுழைய முயற்ச்சித்துவருகிறார் என்றும், மனுதாரரின் வழக்கிற்கு ஆதரவாக மனுதாரர் முன்வைக்க இருக்கின்ற ஆதாரங்களை அழிக்க 1ம் எதிர்மனுதாரர் முயற்சித்து வருகிறார் என்றும், தாவா சொத்தில் உள்ள இயற்கை அமைப்பு மற்றும் ஆதாரம் அழிக்கப்பட்டுவிட்டால் அது மனுதாரரின் வழக்கிற்கு மிகவும் பாதகமாகவிடும் என்றும், எனவே, தாவா சொத்தைப் பார்வையிட்டு தாவா சொத்து மற்றும் அதைச் சுற்றியுள்ள இயற்கை அமைப்புகளை புகைபடம் எடுத்து அறிக்கை சமர்பிக்க ஆனையர் நியமிக்கவேண்டியது அவசியமாகிறது என்று இந்த மனுதாரர் தரப்பில் சொல்லப்பட்டுள்ளது.

9.3. ஆனால், எதிர்மனுதாரர் தரப்பில் இந்த மனுதாரர் தான் தாவா சொத்தில் அத்துமீறி நுழைந்து சுவாதீணத்தில் இருந்து வருகிறார் என்பதனை இந்த எதிர்மனுதாரரே ஒப்புகொண்டுள்ளார் எனவே தாவாசொத்து மற்றும் அதனை சுற்றியுள்ள இயற்கை கூறுகளை பார்வையிட்டு ஆதரங்களை திரட்ட நீதிமன்ற ஆனையரை நியமிக்க வேண்டிய அவசியமில்லை என்றும், இந்த வழக்கே விளம்புகை பரிகாரம் மற்றும் சொத்தின் சுவாதீணம் கோரியும், தாவா சொத்தினை நலந்திகடு கண்டு நான்கு சமபாகங்களாக பிரித்து அதில் மூன்று சம பங்கினை வாதிக்கு ஒதுக்கிதரக்கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், இந்நிலையில் இந்த மனு அவசியமற்றது என்றும் சொல்லப்பட்டுள்ளது.

D THIRUNAVUKKARASU

Digitally signed by D THIRUNAVUKKARASU
Date: 2022.01.21 16:28:43 +0530

9.4. மேற்கண்ட இருதரப்பின் வாதங்களும், மனு மற்றும் எதிரிருரை ஆகியவற்றை பரிசீலனை செய்ததில், தற்போது மனு சொத்தில் மனுதாரர் தான் இருந்து வருகிறார் என்பது தெரிகிறது.

9.5. அசல் வழக்கினை 1ம் எதிர்மனுதாரர்/வாதி விளம்புகை பரிகாரம் மற்றும் சொத்தின் சுவாதீணம் கோரியும், தாவா சொத்தினை நலந்திகடு கண்டு நான்கு சமபாகங்களாக பிரித்து அதில் மூன்று சம பங்கினை வாதிக்கு ஒதுக்கிதரக்கோரி தாக்கல் செய்துள்ளார். இதனை பார்க்கையில் 1ம் எதிர்மனுதாரரரும்/வாதியும் சொத்தில் பங்கு மற்றும் சுவாதீணம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளது தெரிகிறது. மேலும், இந்த மனுவின் மனுதாரர்களும் தாங்கள் தான் சொத்தின் சுாவதீணத்தில் இருந்து வருவதாகவும், adverse Possession அடிப்படையில் தாவாசொத்தில் இருந்துவருவதாகம் தாவா சொத்தில் சுற்றுச்சுவர் எழுப்பியும் கட்டுமானங்கள் செய்தும் அனுபவித்து வருவதாகவும் சொல்லி வாதிட்டுள்ளார்கள். 1ம் எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் தாவாசொத்தில் தங்களுக்கு பங்கிருப்பதாகவும் மனுதாரர்கள் தங்களது பங்கில் அத்துமீறி நுழைந்து தங்களது பங்கினையும் ஆக்கிரமிப்பு செய்து கட்டுமானங்கள் செய்துவிட்டார்கள் வாதிட்டுள்ளார்கள். மேற்கண்ட இரு தரப்பு வாதங்களையும் பரிசீலிக்கையில், தற்போது மனு சொத்தில் மனுதாரர் இருந்து வருகிறார் என்பதும், அதில் அவர்கள் கட்டுமானங்கள் செய்துள்ளதும் தெரிகிறது.

9.6. மேற்கண்டவற்றை பரிசீலிக்கையில் இந்த மனுவின் மனுதாரர் தாவா சுவாதீணத்தில் இருந்து வருவதையும் அதில் கட்டுமானங்கள் செய்துள்ளதையும் எதிர்மனுதாரர் தரப்பில் மறுக்கப்படவில்லை என்பது தெரிகிறது. இந்த மனுவின் விவரங்களை பார்க்கையில் மனுதாரர் தனது தரப்பு சாட்சியங்களாக எதனை நீதிமன்றத்தில் சமர்பிக்க இருக்கின்றாரோ அதனை 1ம் எதிர்மனுதாரர் அழிக்க முயற்சிப்பதாகவும் அந்த ஆதாரங்கள் அழிக்கப்பட்டால் தனது வழக்கிற்கு பாதகமாகிவிடும் என்றும் அதனால் அவைகளை நீதிமன்ற ஆணையர் பார்வையிட்டு புகைபடம் எடுத்து சமர்பிக்க மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது தெரிகிறது. அதாவது மனுதாரர் தரப்பு சாட்சியத்தை பார்வையிட்டு புகைபடம் எடுத்து நீதிமன்றத்தில் அறிக்கை சமர்பிக்க நீதிமன்ற ஆணையரை நியமிக்க இந்தமனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஆனால் இது குறித்து மாண்புமிகு உயர்நீதிமன்றம் அவர்கள்

D THIRUNAVUKKARASU
Digitally signed by D THIRUNAVUKKARASU
Date: 2022.01.21 16:28:53 +0530

நீதிமன்ற ஆணையர் நியமிக்கபோரும் மனுவானது சுவாதீனத்தை நிரூபணம் செய்யவும் அதற்கான ஆதரங்களை திரட்டும் நோக்கத்திலும் இருத்தல் கூடாது என்று மாண்புமிகு உயர்நீதிமன்றம் அவர்கள் THE HONOURABLE High Court of Judicature at Madras in Chinnathambi & Others Versus Anjalai reported in 2006 (5) CTC 494, in which Honourable High court of Madras has held that an Advocate Commissioner should not be appointed to find out the possession of the property, which has to be adjudicated only by oral and documentary evidence. மற்றும், THE HONOURABLE High Court of Judicature at Madras in A. Meganathan Versus S. Ramalingam reported in 2017 (3) MWN (Civil) 627 in which Honourable High court of Madras has held that the parties to the suit cannot file petition seeking appointment of an Advocate commissioner to collect evidence one way or other directly or indirectly. மற்றும், THE HONOURABLE High Court of Judicature at Madras in S. Anand & Others Versus A. Jeyabalan & Others reported in 2020 (1) CTC 182 held that a Commissioner cannot be appointed to find out as to who is in possession of the property. மற்றும், THE HONOURABLE High Court of Judicature at Madras in Gajendran -Vs- 1.Kuppu 2.Muthu 3.Mala reported in 2017 (3) TLNJ 238 (Civil) in which Honourable High court of Madras has held that The Court cannot appoint an Advocate Commissioner in order to secure evidence which will support either of the parties. மற்றும், THE HONOURABLE High Court of Judicature at Madras in Dhanalakshmi - Vs- 1. Kumaresan 2. Nasathram 3. Dhanalakshmi 4. Rani 5. Lakshmi reported in 2021 (3) TLNJ 40 (Civil) The Court cannot appoint an Advocate Commissioner in order to collect evidence regarding who is in possession. மேற்கண்ட முன்தீர்புகளில் நீதிமன்ற ஆணையர் நியமிக்கபோரும் மனுவானது சுவாதீனத்தை நிரூபணம் செய்யவும் அதற்கான ஆதரங்களை திரட்டும் நோக்கத்திலும் இருத்தல் கூடாது என்று குறிப்பிட்டு சொல்லியுள்ளார்கள். எனவே தாவா சொத்தில் மனுதாரர் தரப்பு ஆதாரங்கள் இருப்பதாகவும் அதனை எதிர்மனுதாரர் அழிக்க முயற்சிப்பதாகவும் அதனால் தாவா சொத்தில் மனுதாரர் சுற்றுசுவர் எழுப்பி கட்டுமானங்கள் செய்திருப்பதை நீதிமன்ற ஆணையர் பார்வையிட்டு புகைபடம் எடுத்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவேண்டும் என்றும் அது மனுதாரர் / பிரதிவாதிகள் தரப்பு வழக்கிற்கு ஆதாரமாகும் என்று சொல்லி இந்தமனு தாக்கல் செய்து வாதிட்டுள்ளது ஏறப்புடையதாக இல்லை.

9.7. தாவாசொத்தின் இயற்கை கூறுகளை அழித்து மனுதாரர்களுக்கு இடையூறு கொடுக்கவேண்டும் என்ற நோக்கத்துடன் 1வது எதிர்மனுதாரர் தாவா சொத்தில்

D THIRUNAVUKKARASU
Digitally signed by D THIRUNAVUKKARASU
Date: 2022.01.21 16:29:03 +0530

அத்துமீறி நுழைய முயற்ச்சித்து வருகிறார் என்றும், மனுதாரரின் வழக்கிற்கு ஆதரவாக மனுதாரர் முன்வைக்க உத்தேசித்துள்ள ஆதாரங்களை அழிக்க எதிர்மனுதாரர் முயற்சித்து வருகிறார் என்றும், எனவே தாவா சொத்தில் தாங்கள் சுற்றுசுவர் எழுப்பி கட்டுமானங்கள் செய்திருப்பதாகவும் அதனை நீதிமன்ற ஆனையர் பார்வையிட்டு புகைப்படம் எடுத்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவேண்டும் என்றும் மனுதாரர்தரப்பில் வாதிடப்பட்டுள்ளது, மனுதாரர்கள் தாங்கள் எதனை ஆதாரமாக காண்பிக்க இருக்கின்றார் என்பது பொறுத்து மனுவில் சொல்லப்படவில்லை ஆனால் வாதத்தின்போது தாவாசொத்தில் உள்ள கட்டுமானங்களையும் அதன் அமைப்பையும் காண்பிக்க வேண்டியுள்ளது என்று வாதிடப்பட்டது இதனை பார்க்கையில் தாவாசொத்தில் உள்ள கட்டுமானங்களையும் மேம்பாடுகளையும் காண்பிக்கும் நோக்கத்தோடு மனு தாக்கல் செய்துள்ளார்கள் என்பது தெரிகிறது. ஆனால், இதைபொறுத்து தங்களது இடத்தையும் ஆக்கிரமிப்பு செய்து சேர்த்து மனுதாரர்கள் சுற்று சுவர் எழுப்பி கட்டுமானங்கள் செய்துள்ளார்கள் என்றும் அதற்க்காகதான் சுவாதீணம் கோரி வழக்கு தாக்கல் செய்திருப்பதாகவும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் வாதிடப்பட்டுள்ளது. இதனை பார்க்கையில் இருதரப்பிலும் தாவா சொத்திலுள்ள கட்டுமானங்கள் மறுக்கப்படவில்லை ஒப்புகொள்ளப்பட்டுள்ளது தெரிகிறது. நீதிமன்ற ஆனையர் சென்றாலும் தாவாசொத்திலுள்ள சுற்று சுவர் மற்றும் அதிலுள்ள இதர கட்டுமானங்களையே பார்வையிட நேரிடும், இங்கு எதிர்மனுதாரர் தரப்பிலேயே மேற்படி சுற்று சுவர் மற்றும் அதிலுள்ள இதர கட்டுமானங்கள் மற்றும் மனுதாரரின் சுவாதீணமும் மறுக்கப்படாத நிலையில் தாவா சொத்தின் இயற்கை கூறுகளை பார்வையிட்டு அதனை புகைபடம் எடுத்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய நீதிமன்ற ஆனையர் நியமனம் எந்த வகையிலும் வழக்கின் பிரச்சனையை தீர்க்க ஏதுவாக இருக்காது.

9.8. இந்த அசல் வழக்கே விளம்புகை மற்றும் சொத்தின் சுவாதீணம் மற்றும் பாகப்பிரிவனை கோரியும் தாக்கல் செய்யப்பட்டுள்ளதையும், இந்த மனுவின் எதிர்மனுதாரர் தரப்பில் தாவாசொத்திலுள்ள சுற்று சுவர் மற்றும் அதிலுள்ள இதர கட்டுமானங்கள் மற்றும் மனுதாரரின் சுவாதீணமும் மறுக்கப்படவில்லை என்பதனையும், நீதிமன்ற ஆனையர் நியமிக்ககோரும் மனு சுவாதீணத்தை நிரூபணம் செய்யவும் அதற்கான ஆதரங்களை திரட்டும் நோக்கத்திலும் இருத்தல் கூடாது என்று

D THIRUNAVUKKARASU
Digitally signed by D THIRUNAVUKKARASU
Date: 2022.01.21 16:29:12 +0530

மாண்புமிகு உயர்நீதிமன்றம் ஆவர்கள் மேற்கண்ட முன்தீர்ப்புகளில் குறிப்பிட்டு சொல்லியுள்ளதையும், அசல் வழக்கானது கடந்த 2013 ம் வருடம் தாக்கல் செய்யப்பட்டு தற்போது சாட்சிய விசாரனை துவங்கப்பட்டு நிலுவையிலிருந்து வருவதையும் கருத்தில் கொண்டும், தாவா சொத்தில் உள்ள சுற்றுசுவர் மற்றும் கட்டுமானங்கள் எதிர்மனுதாரர் தரப்பில் மறுக்கப்படாத நிலையில் தாவா சொத்தில் உள்ள அந்த சுற்றுசுவர் மற்றும் இதர கட்டுமானங்களை நீதிமன்ற ஆனையர் பார்வையிட்டு புகைபடம் எடுத்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவேண்டும் என்பது வழக்கின் இத்தருனத்தில் தேவையற்றதாகவே இருக்கிறது என்றே தீர்வு காணப்படுகிறது.

9.9. மேற்கண்ட காரணங்களின் அடிப்படையில் மேற்கண்ட அசல் வழக்கினை தீர்மானிப்பதில், தாவா சொத்தில் உள்ள சுற்றுசுவர் மற்றும் கட்டுமானங்கள் மறுக்கப்படாத நிலையில், அசல் வழக்கானது கடந்த 2013 ம் வருடம் தாக்கல் செய்யப்பட்டு தற்போது சாட்சிய விசாரனை துவங்கப்பட்டு நிலுவையிலிருந்து வரும் இத்தருணத்தில் தாவா சொத்தில் உள்ள அந்த சுற்றுசுவர் மற்றும் இதர கட்டுமானங்களை நீதிமன்ற ஆனையர் பார்வையிட்டு புகைப்படம் எடுத்து அதனை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவேண்டும் என்பதற்காக நீதிமன்ற ஆனையரை நியமிக்க கோரியுள்ளது இவ்வழக்கின் இத்தருனத்தில் ஏற்புடையதாக அல்ல என்று முடிவு செய்து இந்த மனுவின் இந்த பிரச்சனை தீர்வு காணப்படுகிறது.

10. **<u>தீர்வு.</u>**

முடிவாக இந்த மனுவானது செலவுதொகையின்றி தள்ளுபடி செய்து உத்தரவு பிறப்பிக்கப்படுகிறது.

இவ்வுத்திரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினி மூலம் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு இன்று 2022 ம் வருடம் ஜனவரி மாதம் 21 ம் நாள் வெள்ளிக்கிழமை திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

D THIRUNAVUKKARASU

Digitally signed by D THIRUNAVUKKARASU
Date: 2022.01.21 16:29:25 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,
ஊத்துக்குளி.

1. மனுதாரர் தரப்பு சாட்சியங்கள்– இல்லை

2. மனுதாரர் தரப்பு ஆவணங்கள்– இல்லை

3. எதிர்மனுதாரர் தரப்பு சாட்சியங்கள்– இல்லை

4. எதிர்மனுதாரர் தரப்பு ஆவணங்கள்– இல்லை.

D THIRUNAVUKKARASU

Digitally signed by D THIRUNAVUKKARASU
Date: 2022.01.21 16:29:33 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,
ஊத்துக்குளி